12.2.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழக கடலோரப் பகுதிகளில் மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில், அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதன்கிழமை காலையுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் வறண்ட வானிலை நிலவியது. அதிகபட்சமாக பாளையங்கோட்டை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் தலா 93 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவாகியுள்ளது. தமிழகத்தின் கடலோரப் பகுதிகளிலும், புதுச்சேரியிலும் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாநகரின் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யும். அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 86, 72 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும் இருக்கும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

### சாத்தனூர் அணையின் கால்வாய் பாசனம் இன்றுடன் நிறுத்தம் தென்பெண்ணை ஆற்றில் 15 வரை தண்ணீர் திறப்பு

சாத்தனூர் அணையின் வலது, இடதுப்புற கால்வாய்கள் வழியாக 10 நாட்களாக திறக்கப்பட்ட தண்ணீர் வியாழக்கிழமை (பிப்ரவரி 12) காலை 8 மணிக்கு நிறுத்தப்படுகிறது. தென்பெண்ணை ஆற்றில் இம் மாதம் 15-ம் தேதி வரை தொடர்ந்து தண்ணீர் வெளியேற்றப்படும் என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு அடுத்துள்ள சாத்தனூர் அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 119 அடி. அணையின் முழு கொள்ளளவு 7,321

மில்லியன் கன அடி. இந்த அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்ற திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கடந்த 2-ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்ட உயரம் 84.35 அடியாகவும், கொள்ளளவு 1,887 மில்லியன் கன அடியாகவும் இருந்தது. அணையின் வலதுப்புற கால்வாய் வழியாக 48 ஏரிகளுக்கும், இடதுப்புற கால்வாய் வழியாக 40 ஏரிகளுக்கும் என மொத்தம் 88 ஏரிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இன்றுடன் தண்ணீர் திறப்பு நிறுத்தம்: அரசு உத்தரவின்படி, 10 நாள் தண்ணீர் திறப்பு வியாழக்கிழமை (பிப்ரவரி 12) காலை 8 மணியுடன் நிறைவு பெறுகிறது. எனவே, காலை 8 மணிக்கு அணையின் கால்வாய் பாசனம் நிறுத்தப்படுகிறது. புதன்கிழமை மாலை நிலவரப்படி அணையின் கால்வாய் பாசனத்தால் 88 ஏரிகளில் 50-க்கும் மேற்பட்ட ஏரிகளில் 40 சதவீதம் தண்ணீர் தேங்கியுள்ளதாகவும், மற்ற ஏரிகளில் 25 முதல் 30 சதவீதம் அளவுக்கு தண்ணீர் நிரம்பி உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

15 வரை ஆற்றில் தண்ணீர் திறப்பு:

இதற்கிடையே, திருக்கோயிலூர் பழைய ஆயக்கட்டு பகுதிக்கான உரிமை நீர், புதன்கிழமை 8 மணி முதல் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப் பட்டுள்ளது. வியாழக்கிழமை காலை 8 மணி வரை விநாடிக்கு 894 கன அடி வீதமும், வியாழக்கிழமை (பிப்ரவரி 12) முதல் பிப்ரவரி 15 காலை 8 மணி வரை விநாடிக்கு 800 கன அடி வீதமும் தென்பென்னை ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன் மூலம் அணையில் இருந்து மொத்தம் 284.6 மில்லியன் கன அடி தண்ணீர் திருக்கோயிலூர் பழைய ஆயக்கட்டு பகுதிக்கு திறந்து விடப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பருவத்துக்கு ஏற்ற தோட்டப் பயிர் வெண்டை!



பிப்ரவரி மாதத்தில் இருந்து ஏப்ரல் மாதம் வரையுள்ள பருவத்தில் தோட்டப் பயிரான வெண்டைக்காயைப் பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம். இந்தக் காயில் உள்ள வழுவழுப்புத் தன்மை எலும்பு களைச் சுற்றியுள்ள ஜவ்வு பசைக்கு சத்தை அளிக்கிறது. இது மட்டுமின்றி, பல சத்துகள் நிரம்பிய இந்தக் காயை அனைவரும் தங்களது அன்றாட உணவில் சேர்க்க விரும்புகின்றனர். இந்த வெண்டைக்கு ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலும், பிப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலும் பயிரிடும் காலமாக உள்ளது.விதையளவு: ஒரு ஹெக்டேர் நிலத்தில் வெண்டை பயிரிட 6 கிலோ வீரிய ரக விதை தேவைப் படுகிறது. விதை நேர்த்தி: ஒரு கிலோ விதை நேர்த்தி செய்ய 4 கிராம் டிரைகோடெர்மா விரிடியம், 400 கிராம் அப்ஸாஸ்பைரில்லமும், பயன்படுத்த வேண்டும். பின்னர் அரிசிக் கஞ்சியுடன் விதை நேர்த்தி செய்து நிழலில் 20 நிமிடங்கள் உலர வைத்தப்பின் பயன்படுத்த வேணடும். இடைவெளி, நடவு முறை: வெண்டையை 45 ல 45 மற்றும் 45 ல 30 என்ற இடைவெளியில் ரகத்துக்கு ஏற்றபடி இடைவெளியை விட வேண்டும். குழிக்கு ஒரு விதை வீதம் 1.2 செ.மீ. ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும். நீர்ப்பாசனம், நீர்வழி உரமிடல்: வீரிய ஒட்டு ரக வெண்டைக்கு பருவக் காலம் முழுவதும் பரிந்துரைக்கப்பட்ட உர அளவான 200:100:100 கிலோ தழை, மணி, சாம்பல், சத்துகள் நீர்வழியாக உரமிட வேண்டும். தினமும் சொட்டு நீர்ப்பாசன முறையில் ஒரு மணி நேரம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தேவையான அளவு நீரில் கரையும் உரத்தைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் சொட்டு நீர்ப் பாசனமாக உரத் தொட்டியின் மூலம் இடவேண்டும். பின்செய் நேர்த்தி:

விதை ஊன்றிய 30-ஆம் நாளில் இருந்து 10 நாள்களுக்கு ஒரு முறை நீரில் கரையும் 19:19:19 உரத்தை 0.5 சதவீதம் அளவுக்கு தெளிக்க வேண்டும். 1 சதவீத யூரியாவுடன் 1 சதவீத மியூரேட் ஆஃப் பொட்டாஷை கலந்து 30, 45-ஆவது நாளில் தெளிக்க வேண்டும். களையெடுத்தல்: ப்ளோக்ளோரலின் ஒரு கிலோ அல்லது மெட்டாளாகுளோர். 0.75 கிலோ அளவு களைக் கொல்லியை விதை ஊன்றிய 3-ஆம் நாள் தெளிப்பதன் மூலம் களையைக் கட்டுப்படுத்தலாம். மேலும் களைக் கொத்தி உதவியுடன் 30-ஆம் நாளில் ஒரு முறையும், அதற்கு மேல் களை உள்ள அளவைப் பொருத்தும் களை எடுக்க வேண்டும். இதுபோன்ற முறைகளைப் பயன்படுத்தி நன்கு வளர்ந்த முற்றாத காய்களை அறுவடை செய்து விவசாயிகள் பயன்பெறலாம் என வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.

## <u>கன்று ஈன்ற கறவை மாடுகளுக்கான சிக்கல்களைத் தவிர்க்கும் வழிமுறைகள்...</u>



கன்று ஈன்ற கறவை மாடுகளுக்கு ஏற்படும் சிக்கல்களை தவிர்க்க உரிய வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்று ஈரோடு கால்நடை மருத்துவப் பல்கலைப்பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உதவிப் பேராசிரியை நா.வீ.கவிதா தெரிவித்தார். இதுகுறித்து அவர் புதன் கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: கன்று ஈன்ற கறவை மாடுகளில் நஞ்சுக்கொடி தங்குதல் மற்றும் கருப்பை வெளித்தள்ளுதல் ஆகிய இரண்டு முக்கிய சிக்கல்கள் உருவாகின்றன. **நஞ்சுக்கொடி:** மாடுகள் சினையாக இருக்கும்போது கருப்பையினுள் வளரும் சிசுவுக்கு தேவையான உணவு மற்றும் பிராண வாயுவை அளிப்பதுடன் சிசுவின் கழிவுப்பொருள்களை அகற்றும் உறுப்பாக செயல்படுவது நஞ்சுக்கொடி ஆகும். பொதுவாக கன்று ஈன்ற 3 முதல் 8 மணி நேரத்திற்குள் நஞ்சுக்கொடி தானாகவே வெளித்தள்ளப்பட்டு விழுந்துவிடும். இதற்கு

மேலும் அதாவது 8 முதல் 12 மணி நேரம் கழிந்தும் கூட நஞ்சுக்கொடி விழாமலிருந்தால் அதனை உடனடியாக கவனிக்க வேண்டும். சில விவசாயிகள் கன்று ஈன்ற மாடு நஞ்சுக்கொடி போடும் வரை பாலில் நச்சுத்தன்மை இருக்கும் என நினைத்துக்கொண்டு சீம்பாலினைக் கறக்காமல் இருப்பர். இது அறிவியல் ரீதியாக உண்மையல்ல. மாறாக கன்றினை பால் குடிக்க விடுவதால் அல்லது பாலினைக் கறப்பதால் ஈன்ற மாடுகளின் நாளமில்லாச் சுரப்பிகள் தூண்டப்பட்டு கருப்பை சுருங்கி விரியும். இதனால் நஞ்சுக்கொடி தானாகவே விழும் வாய்ப்புள்ளது. சிலர் தொங்கிக் கொண்டிருக்கும் நஞ்சுக்கொடியை விழ வைப்பதற்காக அதை ஒரு குச்சியைக்கொண்டு சுற்றி இழுப்பார்கள் அல்லது அதில் ஒரு கல்லைக் கட்டி விடுவர். இவ்வாறு செய்வதால் நஞ்சுக்கொடியானது முழுமையாக பிரிந்து வராமல் மாட்டிற்கு வெளியே தொங்கிக் கொண்டிருக்கும் பகுதி மட்டும் அறுந்து விழுந்துவிடும். மீதம் உள்ள பகுதி கருப்பையின் உள்ளேயே தங்கி நோயை உருவாக்கும். அடுத்து கன்று ஈன்றவுடன் மாடுகளுக்கு மூங்கில் இலை அல்லது வெண்டைக்காய் அல்லது சந்தனம் ஆகியவற்றை தீவனமாகக் கொடுப்பது வழக்கத்தில் உள்ளது. மூங்கில் இலை மற்றும் வெண்டைக்காயில் கருப்பையைச் சுருங்கி விரியச் செய்யக்கூடிய வேதிப்பொருள் உள்ளது. இது கருப்பையைச் சுருங்கி விரியச் செய்வதால் நஞ்சுக்கொடி தானாகவே பிரிந்து விழ வாய்ப்புள்ளது.

**நஞ்சுக்கொடி தங்கியுள்ள மாடுகளில் காணப்படும் அறிகுறிகள்:**

கன்று ஈன்று 8 மணி நேரத்திற்கு பின்பும் நஞ்சுக்கொடி தங்கியிருக்கும் மாடுகளில் காய்ச்சல், சோர்வு, தீவனம் உண்ணாமை போன்ற அறிகுறிகள் காணப்படும். கன்று ஈன்ற 24 மணி நேரம் கழிந்த பின் நஞ்சுக்கொடி அழுக ஆரம்பித்து துர்நாற்றம் அடிக்கும். அறையின் வெளிப்புறத்தில் ஈக்கள் மொய்க்கும். பால் உற்பத்தி குறைந்து விடும். சிவப்பான நீரைப்போன்ற திரவம் மிக அதிக அளவில் துர்நாற்றத்துடன் காணப்படும். இது ரத்தத்தில் நச்சுத்தன்மை கலந்து விட்டதைக் குறிக்கும். நஞ்சுக்கொடி தொங்கிக் கொண்டிருக்கும்போது மாடு கீழே படுப்பதை

முடிந்தவரைத் தவிர்க்க வேண்டும். நஞ்சுக்கொடிதானே என நினைத்து தகுதியற்றவர்களைக் கொண்டு எடுக்க முற்படுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். ஏனெனில், இவர்கள் கருப்பையில் உள்ள முடிச்சுகளை முறையாகப் பிரித்து எடுக்காமல் நஞ்சுக்கொடியை வெறுமனே பிடித்து இழுப்பார்கள். இதனால், கருப்பை முடிச்சுகள் அறுந்து ரத்தக் கசிவு ஏற்படும். **கருப்பை வெளித்தள்ளுதல்:** கருப்பை வாய் தள்ளுதல், உறுப்புத் தள்ளுதல், அடி தள்ளுதல், சவுரி தள்ளுதல், நாய்த்தலை படுதல், சொவரொட்டி தள்ளுதல் எனப் பல்வேறு பெயர்களில் கருப்பை வெளித்தள்ளுதல் அழைக்கப்படுகிறது. கருப்பை வெளித்தள்ளுதலுக்கு முக்கியக் காரணம் ஈஸ்ட்ரோஜன் என்ற ஹார்மோன் சில பசுக்களில் அதிக அளவில் சுரப்பதேயாகும். இதன் காரணமாக இடுப்புப் பகுதிச் சதைகள் மற்றும் கருப்பையின் பாகங்கள் தளர்ந்து போய்விடுகின்றன. இந்த தளர்ச்சியின் காரணமாக முதலில் கருவறை சற்று வெளியே தெரிகிறது. இவ்வாறு வெளியே தள்ளப்பட்ட கருப்பையின் வாயை நுண்ணுயிரிகள் தாக்கும்போது இந்த மென்மையான உறுப்பிற்கு ஒருவித எரிச்சல் ஏற்படுகிறது. இந்த எரிச்சலின் காரணமாக கருப்பையானது மேலும்வெளித்தள்ளப்படுகிறது.

**முதலுதவி சிகிச்சைகள்**: வெளித்தள்ளப்பட்ட கருப்பையினை உடல்மட்டத்திற்குச் சிறிது மேலே தூக்கிப் பிடித்தால் சிறுநீர் வெளியேற வாய்ப்புண்டு. மேலும் இவ்வாறு செய்வதால் கருப்பை வீங்கிப் போவதையும் தடுக்கலாம். மருத்துவரிடம் கொண்டு செல்லும் வரையோ அல்லது மருத்துவர் வரும் வெளித்ள்ளப்பட்ட கருப்பையினை முடிந்த வரை ஈரத்தன்மையுடன் இருக்கச் செய்ய வேண்டும். அதற்குச் சுத்தமான ஈரத்துணியை கருப்பையின் மேலே போட்டு மூடிவைக்க வேண்டும். துணி காயக் காய சுத்தமான குளிர்ந்த நீரினை ஊற்ற வேண்டும். தகுதி வாய்ந்த கால்நடை மருத்துவரல்லாத மற்ற நபர்களைக் கொண்டு வெளித்தள்ளப்பட்ட உறுப்புக்களை மீண்டும் உள்ளே தள்ள முயற்சிக்கக் கூடாது. கையால் அமுக்கவோ, அடிக்கடி கருப்பையினைத் தொட்டுப் பார்ப்பதோ கூடாது.கூடுமான வரையில் மாடு முக்காமல் பார்த்துக்

கொள்ள வேண்டும். இதற்கு மாட்டிற்கு ஏதாவது உண்ணக் கொடுத்தோ அல்லது சிறிதளவு சமையல் உப்பினை மாட்டின் நாக்கில் தேய்த்து விட்டோ மாடு அசைபோடும்படி செய்தால் மாடு முக்காமல் இருக்கும். மாட்டின் கீழ்தாடையில் வைக்கோல் பிரி அல்லது கயிற்றினைக் கட்டி விட்டாலும் மாடு அசைபோட்டுக் கொண்டு முக்காமல் இருக்கும்.

**நோய்குறியீடு ஏற்படாமல் தவிர்க்கும் முறைகள்:** இக்கருப்பை வெளித்தள்ளுதல் தாது உப்புகள் மற்றும் சத்துக்கள் குறைவினாலும் ஏற்படும். ஆகவே சினைக்காலத்தில் பசும்புல் அளிப்பது அவசியம். நிறை சினைக் காலத்தில் மாடுகளுக்குத் தீவனத்தினை ஒரே வேளையில் அதிக அளவு அளிக்காமல் 3 அல்லது 4 பகுதியாகப் பிரித்து அளிக்க வேண்டும். தொழுவத்தில் மாடுகள் நிற்கும் இடம் முன்னோக்குச் சரிவு கொண்டதாக அமைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்

## விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்

கொடைக்கானல் தோட்டக்கலைத்துறை அலுவலக வளாகத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் பாண்டி தலைமை வகித்தார் கார்த்திக் வரவேற்றார். கூட்டத்தில் விளை நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகளை பாதுகாக்கும் முறை, உரமிடுதல் குறித்து விளக்கப்பட்டது. கூட்டத்தில், கொடைக்கானல் பகுதிகளைச் சேர்ந்த அட்மா திட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## 20-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் இம் மாதம் 20-ஆம் தேதி நடைபெறுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாதம்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, பிப்ரவரி மாதத்துக்கான குறைதீர் கூட்டம், வரும் 20-ஆம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் அரசின்

அனைத்துத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்கின்றனர். எனவே, மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறலாம். மேலும், விவசாயிகள் தங்கள் கோரிக்கை களை இம் மாதம் 13-ஆம் தேதிக்குள் மனுக்களாக எழுதி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கலாம். இதுதவிர, வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளில் மனுக்களைப் போடலாம். இம் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு குறைதீர் கூட்டத்தின்போது உரிய பதில் அளிக்கப்படும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## <u>திருச்செங்கோட்டில் உதவி வேளாண் அலுவலர் சங்க கூட்டம்</u>

தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர் சங்கத்தின் திருச்செங்கோடு கோட்ட அளவிலான ஒன்றிய நிர்வாகிகள், உறுப்பினர்களின் குறைகேட்பு கூட்டம் மாவட்ட தலைவர் சேகர் தலைமையில், திருச்செங்கோடு உழவர் சந்தை வளாக அலுவலகத்தில் அண்மையில் நடந்தது. மாவட்ட செயலர் சுந்தரமூர்த்தி தீர்மானங்களை வாசித்தார். பொருளாளர் ராஜசேகரன்,துணைத் தலைவர் வீரமணி, இணைச் செயலர் செந்தில்குமரன் பேசினர். முன்னாள் மாவட்டத் தலைவர் ஞானபிரகாசம் பேசினார். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:உயிர் உரங்கள் மற்றும் திரவநிலை உயிர் உரங்களின் இலக்கை குறைத்து நிர்ணயிக்க வலியுறுத்துவது, தோட்டக்கலை துறையில் பணிப்பளு அதிகம் உள்ள நிலையில், துணை இயக்குநர் இணை அடங்கல் பராமரித்திட கேட்டுக்கொண்டுள்ளதை நிறுத்திவைக்க வேண்டும்.

## <u>நீடாமங்கலத்திலிருந்து அரைவைக்கு அனுப்பப்பட்ட 1000 டன் சன்னரக நெல்</u>

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து ஆயிரம் டன் சன்னரக நெல் அரைவைக்காக தருமபுரிக்கு சரக்கு ரயிலில்

செவ்வாய்க்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது. அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரைவைக்காக சரக்கு ரயிலில் அனுப்பிவைக்கப்பட்டு வருகிறது. பல்வேறு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் செவ்வாய்க்கிழமை கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் 75 லாரிகளில் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. பிறகு அவை சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் ஏற்றப்பட்டு தருமபுரிக்கு அனுப்பிவைக்கப்பட்டன. கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்து பயன்பெறலாம். குமரி மாவட்டத்தில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் உற்பத்தி செய்த நெல்லை விற்பனை செய்து பயன்பெறலாம் என விவசாயிகளை மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண் கேட்டுக் கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: குமரி மாவட்டத்தில் விவசாயி களிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யும் வகையில் திட்டுவிளை, தாழக்குடி, செண்பகராமன்புதூர், நாகர்கோவில், மாடத்தட்டுவிளை, பறக்கை, தேரூர், குருந்தன்கோடு ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் இந்த கொள்முதல் நிலையங்களில் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை விற்பனை செய்து பயன்பெறலாம். நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படும் இடங்கள் விவரம்: திட்டுவிளை தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம், தாழக்குடி அங்கன்வாடி மையம், செண்பகராமன் புதூர் பழைய கிராம நிர்வாக அலுவலகம், நாகர்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், மாடத்தட்டுவிளை தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம், பறக்கை பூமி பாதுகாப்பு சங்கம், குருந்தன்கோடு பூமி பாதுகாப்பு சங்கக் கட்டடம், தேரூர் கவிமணி நூல் நிலையம் ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன என்றார் அவர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 20ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

காஞ்சிபுரம்: விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 20ம் தேதி, காஞ்சிபுரத்தில் நடைபெற உள்ளது என, மாவட்ட ஆட்சியர் தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர் சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம், வரும் 20ம் தேதி, வெள்ளிக்கிழமை, காலை 11:00 மணிக்கு, ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள, ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு, முக்கிய வேளாண் துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எள் சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் : வேளாண் அதிகாரி யோசனை

தஞ்சாவூர்: "தஞ்சாவூர் சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் மாசிப்பட்ட எள் சாகுபடியில் தொழில்நுட்பங்களை கடைபிடித்தால், குறைவான செலவில், அதிக மகசூல் பெறலாம்,' என, வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார். குறைந்த வயதில் (85 நாட்கள்) அதிக நீர் தேவையின்றி குறைவான சாகுபடி செலவில், அதிக லாபம் ஈட்டக்கூடிய பயிர் எள். இப்பயிர் சாகுபடி செய்வதற்கு, பிப்ரவரி, மார்ச் மாத (மாசி பட்டம்) பருவமே ஏற்ற தருணம். இப்பருவத்துக்கு ஏற்ற ரகங்கள் கோ.1, டி.எம்.வி., 4, மற்றும் 6 (வயது 85- 90 நாட்கள்), டி.எம்.வி., 3 (80- 85 நாட்கள்), வி.ஆர்.ஐ., 1 (70- 75 நாட்கள்) ஆகும். இதற்கு, முதலில், வயலை நன்கு புழுதிபட உழவு செய்ய வேண்டும்.

கடைசி உழவுக்கு முன், 5 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான, 2 கிலோ விதையை தேர்வு செய்து, விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்துவதற்காக, டிரைக்கோ டெர்மாவிரிடி உயிர் பூசானகொல்லி மருந்து ஒரு கிலோ விதைக்கு, நான்கு கிராம் என்ற விகிதத்தில் விதையுடன் கலந்து, விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பதற்கு முன், ஒரு பாக்கெட் அசோஸ் பயிரில்லம் நுண்ணுயிர் பொட்டலத்தை, அரை லிட்டர் ஆரிய அரிசி கஞ்சியுடன் கலந்து அதை விதையுடன் சேர்த்து, நேர்த்தி செய்து, நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்துகளை (31 கிலோ யூரியா, 56 கிலோ சூப்பர், 15 கிலோ பொட் டாஷ்) முழுவதுமாக அடி உரமாக இட வேண்டும். மேலுரம் தேவை யில்லை. மாங்கனீசு சல்பேட் என்ற நுண்ணூட்ட உரத்தை ஏக்கருக்கு, 2 கிலோ வீதம், 18 கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராக தூவி மேலாக மூட வேண்டும். பின்னர் 15ம் நாள், 15 செ.மீ. இடைவெளி வைத்து, செடியை களைத்து விட வேண்டும். விதைத்த, 30ம் நாள், 30 செ.மீ. இடை வெளி வைத்து, மீண்டும் ஒருமுறை செடியை களைத்து விட வேண்டும். ஒரு சதுரமீட்டரில், 11 செடிகள் மட் டும் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். இதனால், செடிகள் படர்ந்து வளர்ந்து அதிக கிளைகள் வெடித்து காய்கள் பிடிக்க உதவுகிறது. பாசனத்தை பொறுத்தவரை விதை விதைத்தவுடன், ஒரு முறையும், மண் வளத்தை பொறுத்து, 7ம் நாள் ஒரு முறையும், விதைத்த 25ம் நாள் ஒரு முறையும், பூக்கும் தருணம் ஒரு முறையும், காய் பருவத்தில், ஓரிரு முறையும் நீர்பாசனம் செய்ய வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## நீர்வடிப்பகுதி பயனாளிகளுக்கு பயிற்சி

திருத்தணி: நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு ஒரு நாள் பயிற்சி, நேற்று நடந்தது. திருத்தணி ஒன்றியம், வேலஞ்சேரி ஊராட்சியில், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகாம் திட்டத்தின் கீழ், நீர்வடிப்பகுதி மேலாண்மை குழுக்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது. பயனாளிகளுக்கு திட்ட விளக்கம், சலுகைகள் குறித்தான பயிற்சி வளர்ச்சி அணி அலுவலர் கோபிநாத் தலைமையில் நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் செல்வம் வரவேற்றார். பயிற்சியில், 50க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர். இதில், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு துணை இயக்குனர் முத்துகுமார், உதவி பொறியாளர் லட்சுமிகாந்தன் திட்டம் குறித்தும், நீர் ஆதார மேம்பாட்டு பணிகள், தனிநபர் விவசாயிகளுக்கு நிலப் பணிகள், வாழ்வாதார செயல்பாடு மற்றும் மகளிர் குழுக்களுக்கு வட்டியில்லா கடன், சிறுதொழில் குறித்து பயிற்சி அளித்தனர்.

## ஒரு ஏக்கரில் 6,130 கிலோ நெல் விளைச்சல் காட்டிய ஈரோடு விவசாயி: மாநில விருது பெற்றவர் சாதித்தது எப்படி?



"இயற்கை விவசாயம் மூலம் தான், நம் முன்னோர், அதிகளவில் பயிர் விளைச்சல் அடைந்துள்ளனர்; அதே போல, நாமும் இயற்கை விவசாயத்திற்கு திரும்பினால் சாதிக்கலாம்," என, தமிழக அரசு விருது பெற்ற, ஈரோடு விவசாயி, துரைசாமி கூறியுள்ளார். தமிழக அரசு மூலம் ஆண்டுதோறும், பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்படும். நெற்பயிர் சாகுபடி செய்து, அதிகளவில் விளைச்சல் காட்டும் விவசாயிக்கு, ஐந்து

லட்சம் ரூபாய் மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்படும்.இந்த ஆண்டுக்கான பயிர் விளைச்சல் பரிசை, ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், தாதராகாடு கிராமத்தை சேர்ந்த விவசாயி துரைசாமி பெற்றுள்ளார்.'அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, சூடோமோனோஸ்' ஆகிய நுண்ணுயிர் உரங்களை, இவர் பயன்படுத்தி உள்ளார். இவற்றை, அரசு தான் தயாரித்து தருகிறது. இந்த உரங்கள், காற்றில் உள்ள சத்துகளை இழுத்து, மண்ணுக்குஉரமாக அளிக்கும். பயிர் விளைச்சலில் சாதித்தது குறித்து, விவசாயி துரைசாமி கூறிய தாவது: இப்போட்டியில் பங்குபெற, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்தேன். ஒரு ஏக்கரில், மூன்று கிலோ, சி.ஆர்., 1,009 ரக நெல்லை பயிரிட விரும்பினேன். *பத்து சென்ட் நிலத்தில் நாற்று நட்டேன். *நாற்று வளர்ப்பதற்கு முன், விதை நெல்லை, 200 கிராம் அசோஸ்பைரில்லம், அரை லிட்டர் அரிசி கஞ்சி, 200 கிராம் நாட்டு சர்க்கரையில் கலந்து, 40 நிமிடம் ஊற வைத்தேன். *பயிரிட வேண்டிய நிலத்தில், 100 கிலோ மக்கிய தொழு உரத்துடன், இரண்டு கிலோ அசோஸ்பைரில்லம் கலந்து தூவினேன். *நாற்றை பிடுங்கி, 60 லிட்டர் தண்ணீரில், ஒரு கிலோ அசோஸ்பைரில்லம், ஒரு கிலோ பாஸ்போ பாக்டீரியா, கலந்து அதில் நனைத்து, 30 நிமிடங்கள் கழித்து நடவு செய்தேன். *நூறு கிலோ தொழு உரம், இரண்டு கிலோ பாஸ்போ பாக்டீரியாவை கலந்து, நிழலில், ஈரப்பதத்துடன் வைத்திருந்து வயலில் தெளித்தேன். *நாற்று நட்ட, 15 - 30 - 40வது நாளில், இயந்திரம் மூலம் களையெடுப்பு செய்தேன். *அதன்பின், 150 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 50 கிலோ, 'சூடோமோனஸ்' என்ற உயிர் உரத்தை நிலத்தில் தெளித்தேன். *மூன்றாவது முறை களை எடுத்த பின், பூச்சிமருந்து மற்றும் பூஞ்சாண மருந்து அடிக்கப்பட்டது; இரண்டு டன் கோழி கழிவு உரம் இடப்பட்டது; என்.பி.கே., பொட்டாஷ்

பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு, 25 சதவீதம் செயற்கை உரம், 75 சதவீதம் இயற்கை உரத்தை பயன்படுத்தியதால், என் நிலத்தில் பயிர் விளைச்சல் அதிகரித்தது. மகாராஷ்டிராவில் இருந்து வந்த வேளாண் விஞ்ஞானி ஒருவர் மூலம், 'பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம்' ஆகியவற்றுடன் சர்க்கரை அல்லது இளநீர் கலந்து, கோமியம் சேர்த்து, நிலத்திற்கு சத்து வழங்கும் விவரங்களை கற்றுக் கொண்டேன். இந்த தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தினேன்.நான் சாகுபடி செய்த நெல் ரகத்தில், சராசரியாக ஏக்கருக்கு, 4,000 கிலோ விளைச்சல் கிடைக்கும். இயற்கை உரங்களை பயன்படுத்தியதால், 6,130 கிலோ விளைச்சல் கிடைத்தது. அறுவடைக்கு முன், வேளாண் இணை இயக்குனரகத்திற்கு தகவல்தெரிவித்தேன்.என் மாவட்ட வேளாண் அதிகாரி, மற்றொரு மாவட்ட வேளாண் அதிகாரி, மாவட்ட கலெக்டர் உதவியாளர் அடங்கிய குழு, அறுவடையை ஆய்வு செய்தது.

**சாகுபடிக்காக,**

*ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலவிட்டு உள்ளேன். *தொழு உரத்தை, வீட்டில் உள்ள மாடுகள் மூலமேதயாரித்தேன்.நம் முன்னோர், இயற்கை விவசாயம் மூலம், அதிகளவு மகசூல் பெற்றுள்ளனர். காவிரி டெல்டா விவசாயிகள், ஏக்கருக்கு, ஐந்து டன்; ராமநாதபுரம், எட்டு டன்; கோவை, ஐந்து டன் விளைச்சல் பெற்றுள்ளதாக, ஆவணங்கள் மூலம் தெரிகிறது. நாமும், இயற்கை விவசாயத்திற்கு திரும்பினால், அதிகளவு விளைச்சல் பெற முடியும். இவ்வாறு, அவர் கூறினார். **நான்காவது முறை:** விவசாயி துரைசாமி இதற்கு முன், கருணாநிதி முதல்முறையாக முதல்வராக இருந்தபோது, மாவட்ட பயிர் விளைச்சல் போட்டியில் முதல் பரிசு; 1969 - -70ல், மாநில அளவில் முதல் பரிசு; 1970 - -71ல் மூன்றாவது பரிசு பெற்றுள்ளார். அப்போது, மோட்டார் பரிசாக வழங்கப்பட்டது. கடந்த, 2011க்கு பின்,

பரிசுத் தொகை ஐந்து லட்சம் ரூபாய் மற்றும் தங்கப் பதக்கம் என, உயர்த்தி வழங்கப்பட்டு உள்ளது. தற்போது, நான்காவது முறையாக, துரைசாமி பரிசு பெற்றுள்ளார்.

## வேளாண் தொழில்நுட்ப திறன் மேம்பாட்டு பயிற்சி

கூடலூர் : கூடலூர் தோட்டகலைத் துறை, வேளாண்மை தொழிற் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ், அம்மா பண்ணை மகளிர் குழுக்களுக்கு, செயல்முறை விளக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு குறித்த பயிற்சி முகாம்கள், புத்தூர்வயலில் 4, 5ம் தேதிகளிலும், பாலப்பள்ளி 6,7 தேதியிலும் நடந்தது. முகாமுக்கு, கூடலூர் தோட்டகலைத் துறை உதவி இயக்குனர் சிபிலாமேரி தலைமை வகித்தார். இதில், "இஞ்சி, வாழை, வெங்காயத்திலிருந்து மதிப்பு கூட்டு பொருள்கள தயாரிப்பது' குறித்து வேளாண் வணிகத் துறை உதவி வேலாண்மை அலுவலர் லட்சுமணனும்; வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பது குறித்து உதயகுமார், ஆரோக்கியா ாமி ஆகியோர் விளக்கினர்.முகாமில், தொழிற் நுட்ப மேலாண்மை முகமை திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் யமுனாபிரியா, உதவி மேலாளர்கள் சந்தியா, பானுப்பரியா ஆகியோர் பங்கேற்றனர்.

## முட்டைகோஸ் விவசாயத்தில் சிறு விவசாயிகள் ஆர்வம்

கோத்தகிரி : கோத்தகிரி பகுதியில் முட்டைகோஸ் விவசாயம் களைக்கட்டியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் பிரதான விவசாயம் தேயிலை. கடந்த சில மாதங்களாக, பசுந்தேயிலைக்கு ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சி, விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. அதிகாலை நேரத்தில் கடுமையான பனிப்பொழிவும், பகல் நேரங்களில் சுட்டெறிக்கும் வெயிலும் என, காலநிலை தொடருவதால், பசுந்தேயிலை மகசூல் வெகுவாக குறைந்து, விவசாயிகள் வருவாய் இழந்துள்ளனர். பசுந்தேயிலை விலை வீழ்ச்சியில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள, நீர் ஆதாரம் உள்ள எஞ்சிய விளை நிலங்களில், மலைக்காய்கறி

சாகுபடியில் விவசாயிகள் ஈடுப்பட்டுள்ளனர். இதில், பனியால் பாதிப்பு ஏற்படாத முட்டைகோஸ் பயிர், பல ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி முத்தோரை பாலாடா, கப்பச்சி, கேத்தி பள்ளத்தாக்கு, நெடுகுளா, கட்டபெட்டு மற்றும் கூக்கல் தொரை பகுதியில் முட்டைகோஸ் விவசாயம் களை கட்டியுள்ளது. தற்போது, ஒரு கிலோ முட்டைகோஸ், 4 ரூபாய் முதல், 6 ரூபாய்வரை கிடைத்துவருகிறது. இனிவரும் வறட்சி நாட்களில், குறையும்போது, விலை அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில், அடுத்த மாதத்தில் அறுவடை செய்வதற்கு ஏதுவாக, கூடுதல் கவனம் செலுத்தி பயிரை பாதுகாத்து வருகின்றனர். * பந்தலூர் அருகே அய்யன்கொல்லி சுற்றுவட்டார பகுதிகளிலும்"ஸ்பிரிங்ளர்' மூலம் தண்ணீர் தெளிக்கும் பணியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் மூலம் வறட்சியின் பிடியிலிருந்து தேயிலைதோட்டங்களை காப்பாற்ற இயலும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## <u>"புளி' விளைச்சல் குறைவால் "மார்க்கெட்' விலை அதிகரிப்பு</u>

பழநி : பழநிபகுதியிலுள்ள புளியமரங்களில் மகசூல் குறைவு காரணமாக வெளிமார்க்கெட்டில் விலை அதிகரித்துள்ளது. பழநி-திண்டுக்கல்ரோடு, கொடைக்கானல்ரோடு, உடுமலை ரோடு உள்ளிட்ட நெடுஞ்சாலைகள், ஆயக்குடி, கணக்கன்பட்டி, நெய்க்காரப்பட்டி, பாலசமுத்திரம் உள்ளிட்ட ஊராட்சிப் பகுதிகளில் ஏராளமான புளியமரங்கள் உள்ளன. இவற்றை அந்தந்தபகுதியை சேர்ந்த மொத்தவியாபாரிகள் குறிப்பிட்ட தொகைசெலுத்தி ஒவ்வொருஆண்டும் குத்தகைக்கு எடுக்கின்றனர். பொதுவாக தை மாதம் துவக்கத்திலிருந்து வைகாசி வரை புளிய மரங்களில் காய்ப்பு நன்றாக இருக்கும். இவ்வாண்டு போதிய மழை இல்லாத காரணத்தால் புளியமரங்களில் காய்ப்பு குறைந்துள்ளது.

இதன்காரணமாக புளியின் விலை அதிகரித்துள்ளது. தோலுடன் புளி 10கிலோ ரூ.160 ஆகவும், தோல்நீக்கிய புளி ரூ.500க்கு மொத்த

வியாபாரிகள் திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் விற்பனை செய்கின்றனர். இது கடந்தாண்டை காட்டிலும் 10 கிலோவுக்கு ரூ.10 அதிகமாகும். புதுஆயக்குடி வியாபாரி முருகேசன் கூறியதாவது: 7 ஆண்டுகளாக நெடுஞ்சாலைத்துறை ரோட்டிலுள்ள புளிய மரங்களை குத்தகைக்கு எடுத்து புளி வியாபாரம் செய்கிறேன். கடந்தஆண்டு காய்ப்பு அதிகமாக இருந்தது. எதிர்பார்த்த விலையும் கிடைத்தது. இவ்வாண்டு 10மூட்டை எதிர்பார்த்த மரங்களில் 3 முதல் 6 மூட்டைகள் தான் கிடைக்கிறது. விலை கூடுதல் ஆனாலும், காய்ப்பு குறைவு காரணமாக எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை. வரும் மாதங்களில் ரூ.180, ரூ.190 வரை விலை கூட வாய்ப்புள்ளது,' என்றார்.

## சின்ன வெங்காயத்துக்கு கட்டுபடியான விலை : விவசாயிகள் மீண்டும் சாகுபடிக்கு ஆர்வம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், வெங்காய அறுவடை துவங்கியுள்ள நிலையில், வெங்காய விலை உயர்ந்து வருவதால், கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதனால், மீண்டும் வெங்காய சாகுபடி பணிகளை துவங்கியுள்ளனர். வெங்காய விலைக்கு, ஆட்சி மாற்றத்தை ஏற்படும் சக்தி உள்ளது. இதற்கு காரணம், நமது நாட்டில், சமையல் பொருளில், வெங்காயம் முக்கிய பங்கு வகிப்பதே. அதனால், நாடு முழுவதும், வெங்காய உற்பத்தி முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, கர்நாடகா, மத்தியபிரதேஷ், தமிழகம் ஆகிய வற்றில் அதிகம் வெங்காய உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில், திண்டுக்கல், ராமநாதபுரம், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங் களில், அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்தாண்டு, சின்ன வெங்காயம் தட்டுப்பாடு காரணமாக, ஒரு கிலோ, 100 ரூபாய் வரை, விற்பனை செய்யப்பட்டது. அதனால், விதை வெங்காய விலை அதிகரித்த போதிலும், விவசாயிகள், ஆர்வத்துடன் சாகுபடி செய்தனர்.

வெங்காய சாகுபடி அதிகரித்ததால், விளைச்சல் அதிகரித்து, வரத்து கூடியதால், சந்தையில், சின்ன வெங்காயம் விலை கடுமையாக சரிந்தது. அதனால், ஒரு கிலோ, 15 ரூபாய் வரை விற்பனையானதால், வெங்காயம் சாகுபடி செய்திருந்த விவசாயிகள், கடுமையாக பாதிக்கப்பட்டனர். அதனார், வெங்காய உற்பத்தியை, விவசாயிகள் குறைக்க துவங்கினர். அதனால், சந்தைக்கு வெங்காய வரத்து படிப்படியாக குறைந்ததுடன், விலையில் சற்று அதிகரித்து வருகிறது. ஏ.செக்காரப்பட்டியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது: மூன்று மாதங்களுக்கு முன், ஒரு கிலோ விதை வெங்காயம், 36 ரூபாய் என்ற விலையில் வாங்கி, சாகுபடி செய்தோம். மாவட்டத்தில், வெங்காயம் நடவு செய்த சமயத்தில், ஒரளவுக்கு பருவமழை கைகொடுத்தது. மேலும், மாவட்டத்தில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த குளுமையான கால நிலை காரணமாக, வெங்காயம் நன்கு வளர்ந்தது. இந்நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், சின்ன வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இதில், விவசாயிகள் எதிர்பார்த்த அளவுக்கு மகசூல் கிடைத்துள்ளது. மேலும், தமிழகம் உட்பட, நாடு முழுவதும் சின்ன வெங்காயம் சாகுபடி பரப்பளவு குறைக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளிடம், வியாபாரிகள், கட்டு படியான விலைக்கு, வெங்காயத்தை வாங்கிச் சென்று வருகின்றனர்.இதனால், விவசாயிகளுக்கு போதிய வருவாய் கிடைத்து வருகிறது. மேலும், சின்ன வெங்காயம் விலை தொடர்ந்து சீராக வாய்ப்புள்ளதால், எங்கள் பகுதி விவசாயிகள், மீண்டும், சின்ன வெங்காய சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவ்வாறு, அவர் கூறினார்.

## ராஜபாளையத்தில் பூத்துகுலுங்குது மா பூ

ராஜபாளையம் : மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் ராஜபாளையம் அருகே மா மரங்களில் பூக்கள் பூக்க துவங்கி உள்ளது. ராஜபாளையத்தில் சப்பட்டை, பஞ்சவர்ணம், கிளி மூக்கு, அல்போன்சா போன்ற வகை மாம்பழங்கள் விளையும். ஆண்டு தோறும் பிப்ரவரி, மார்ச்சில் மாவில்

பூக்கள் பூக்கும். கிணறுப் பாசனம் உள்ள மாந்தோப்புகளில் தற்போது பூக்க துவங்கி உள்ளன. இந்த பூக்களில் பூச்சி, பூஞ்சானம், தேன் நோய் ஏற்படாமல் இருக்க, பூச்சி மருந்து அடிப்பது வழக்கம். தற்போது உள்ள பூக்களில் 30 சதவீதமே காய்க்கும். இந்த காய்கள் பழுத்து ஏப்ரல், மே, ஜூன் வரை பழங்கள் கிடைக்கும். ஏப்ரல் முதல் மே வரை தமிழகத்தின் பல மாவட்டங்கள் மற்றும் கேரளாவிற்கு மாங்காய், மாம்பழம் விற்பனைக்கு அனுப்பப்படும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மேட்டூர் நீர்மட்டம்</u>**



மேட்டூர்: டெல்டா பாசனத்திற்கு நீர் திறப்பு நிறுத்தப்பட்டதையடுத்து, மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து 6வது நாளாக 77 அடியாக நீடிக்கிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி, அணைக்கு வினாடிக்கு 202 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர்இருப்பு 39.14 டிஎம்சி.

**<u>விவசாயத்துக்கு தேவையான உரங்கள் இருப்பு வைப்பு</u>**

திருவள்ளூர், : போந்தவாக்கம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் அனைத்து பயிர்களுக்கும் தேவையான உரங்கள் மற்றும் இடுபொருட்கள் தயார் நிலையில் உள்ளதாகவும், அதனை பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு பூண்டி வேளாண்மை உதவி இயக்குனர் பிரின்ஸ் கிளமென்ட் அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: பூண்டி வட்டார விவசாயிகள், நடப்பு நவரை பருவத்திற்கு

தேவையான நெல் விதை, விதை நேர்த்தி செய்வதற்கான டிரைகோ டெர்மா விரிடி மற்றும் நெல், பச்சை பயறு, உளுந்து, வேர்க்கடலை, தென்னை, கரும்பு முதலிய பயிர்களுக்கு அடி உரமாகவும், மேல் உரமாகவும் இடவேண்டிய நுண்ணூட்ட சத்துக்கள், உயிர் உரங்கள், நீலப்பச்சை பாசி மற்றும் பயறு ஒன்டர் முதலிய இடுபொருட்கள் போந்தவாக்கம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. எனவே, இப்பொருட்களை விவசாயிகள் பெற்று பயன்பெறும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**<u>திட்டக்குடியில் பருத்தி கொள்முதல் நிலையம்</u>**

திட்டக்குடி, : திட்டக்குடியில் பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். திட்டக்குடி தாலுகாவில் உள்ள மங்களூர் ஒன்றியத்தில் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலும், நல்லூர் ஒன்றியத்தில் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலும் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். தற்போது பருத்தி அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. அதேபோல் அரியலூர் மாவட்டம் செந்துறை, பெரம்பலூர் மாவட்ட குன்னம் தாலுகாவில் 8 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பருத்தி அறுவடை செய்யும் மூன்று மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் திட்டக்குடி பகுதியில் பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். கொள்முதல் நிலையம் இல்லாததால் வியாபாரிகளிடம் அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது. இதனை சாதகமாக பயன்படுத்தி வியாபாரிகள் விவசாயிகளை எடை அளவுகளில் மோசடி செய்கின்றனர். குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 500 வரை அதிகமாக வசூலித்து விவசாயிகளை ஏமாற்றி வருகின்றனர். எடை மற்றும் விலையில் விவசாயிகளை ஏமாற்றி கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர். பருத்தியை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய வேண்டும் எனில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சி, சேலம் மாவட்டத்தில் உள்ள

ஆத்தூருக்கு எடுத்து செல்ல வேண்டும். சிறு விவசாயிகள் வாகன வாடகைக்கு பயந்து போய் தனியாரிடம் விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. எனவே திட்டக்குடி பகுதியில் அரசு நேரடி பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**<u>சொட்டு நீர் பாசனத்துக்கு விவசாயிகள் மாற வேண்டும் ஆலை ஆட்சியர் வேண்டுகோள்</u>**

ஸ்ரீ முஷ்ணம், : ஸ்ரீமுஷ்ணம் அடுத்த நெடுஞ்சேரியில் வயல்வெளி தொழில் நுட்ப நீடித்த நவீன கரும்பு சாகுபடி குறித்த கூட்டம் நடந்தது. சேத்தியாத்தோப்பு எம்ஆர்கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆட்சியர் சுப்பிரமணியன் தலைமை தாங்கினர். கரும்பு அலுவலர் முருகேசன் வரவேற்றார். தலைமை கரும்பு அலுவலர் ரவிகிருஷ்ணன், முன்னோடி விவசாயி வெங்கடகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பின்னர் ஆலை ஆட்சியர் முன்னோடி விவசாயிகள் நிலத்தில் உள்ள ஏழு புதிய கரும்பு ரகங்களை நேரில் பார்வையிட்டு பேசுகையில், மேற்கத்திய நாடுகள் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி முன்னேறி யுள்ளது. நாம் அதனை பயன்படுத்தாமல் வளர்ந்து வருகிறோம். மத்திய, மாநில அரசுகள் வேளாண்மை துறைக்கு அதிக மானியம் வழங்குகிறது. குறைந்த உற்பத்தி செலவில், குறைந்த இடத்தில் அதிகம் மகசூல் பெற முற்படவேண்டும். சமுதாயத்தை காப்பாற்றக்கூடிய மிகப்பெரிய பொறுப்பு நமக்கு உள்ளது. சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்த வேண்டும் என்றார். தலைமைகரும்பு அலுவலர் ரவிகிருஷ்ணன் பேசுகையில், நிலபரப்பு குறைந்து வருவதால் குறைந்த இடத்தில் அதிக மகசூல் செய்திடவும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். தண்ணீர் இப்பொழுது விலைக்கு வாங்குகிறோம். வருங்கால சந்ததியினரை காப்பற்ற நீரை சேமிக்க வேண்டும் எதிர்காலத்தில் குடிநீர் பற்றாகுறை ஏற்படும். எனவே சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்த வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் ஆலை அலுவலக பொறுப்பு மேலாளர்

ராஜதுரை உட்பட பலர் கலந்து கொண்டனர். கரும்பு உதவியாளர் ராஜாராம் நன்றி கூறினார்.

**<u>ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் உளுந்து சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்</u>**

ரிஷிவந்தியம், : ரிஷிவந்தியம் ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதியில் கள்ளிப்பாடி கிராமம் உள்ளது. இந்த பகுதியில் பருவமழை பொய்த்து விட்டதால் விவசாயிகள் தங்கள் நிலத்தை ரியல் எஸ்டேட் நிறுவனங் களிடம் விற்று வருகின்றனர். இந்நிலையில் கள்ளிப்பாடி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் உளுந்து பயிரை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து விவசாயி கூறுகையில், உளுந்து மூன்று மாத பயிராகும், ஒரு ஏக்கருக்கு ரூ. 5 ஆயிரம் முதல் 6500 வரை செலவாகும். ஒரு முறை பூச்சிகொல்லி மருந்து தெளித்தால் போதும்.கூலி வேலைக்கு ஆட்கள் அதிகமாக தேவைப்படுவதில்லை. களை எடுப்பதற்கு மட்டுமே ஆட்கள் தேவை. ஒரு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் முதல் ரூ. 30 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது. தற்போது மார்க்கெட் கமிட்டியில் உளுந்துக்கு குறைந்த விலை கொடுக்கின்றனர். எனவே கொள்முதல் விலையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும் என்றார்

**<u>மண்ணை மேலும் வளமாக்க சம்பா அறுவடை வயல்களில் உளுந்து, துவரை பயிரிடுங்கள் விவசாயிகளுக்கு யோசனை</u>**

கிருஷ்ணராயபுரம், : கிருஷ்ணராயபுரம் வட்டார பகுதிகளில் சம்பா அறு வடை செய்த வயலில் குறு கிய கால பயிர்களான உளுந்து, துவரை சாகுபடி செய்து அதிக லாபம் பெற லாம் என வேளாண் உதவி இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கிருஷ்ணராய புரம் வட்டார விவசாயிகளுக்கு தெரிவித்துள்ள ஆலோசனை வருமாறு: கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம் பகுதிகள் அதிகளவு விவசாயம் நிறைந்த பகுதிகளாகும். கடந்த சில ஆண்டுகளாக விவசாயத்திற்கு போதி யளவு தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர். இந்த ஆண்டு மேட்டூரிலிருந்து பாசன வாய்க்கால்களில் தண்ணீர் தொடர்ந்து

வந்ததால் விவசாயம் நல்ல முறையில் நடந்து வருகிறது. இந்த ஆண்டு சம்பா சாகுபடி எதிர்பார்த்தது போல நல்ல விளைச்சல் தந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சம்பா அறுவடை செய்த நிலங்களில் மண்ணை மேலும் வளமாக்க குறுகிய கால பயிர்கள் சாகுபடி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். எனவே சம்பா அறு வடை ஆன நிலங்களை நன்றாக உழுது குறுகியகால பயிர்களான உளுந்து, துவரை சாகுபடி செய்ய லாம். ஒரு ஏக்கருக்கு 8 கிலோ வீதம் விதைகளை வாங்கி தெளிக்காலம். இந்த சீசனில் உளுந்து, துவரை சாகுபடி செய்தால் தற்போதுள்ள சீதோஷ்ண நிலைக்கு நல்ல மகசூல் ஈட்டலாம். உளுந்து, துவரை ஆகியவை 70 முதல் 75 நாட்கள் பயிர்களாகும். அறுவடை செய்த நிலங்களில் இது போன்ற குறுகிய கால பயிர்களான உளுந்து, துவரை ஆகியவை சாகுபடி செய் தால் விவசாய நிலங்களில் உள்ள மண்ணும் வளமா கும். மேலும் நல்ல மகசூல் ஈட்டி லாபம் பெறலாம். கிருஷ்ணராய புரம் வட்டாரத்தில் குறுகிய கால பயிர்களான உளுந்து, துவரை ஆகியவை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் மேலும் தகவல் பெற கிருஷ்ணராயபுரம் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை பெறலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் சேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## <u>நீர்வள, நிலவள மேம்பாடு திட்ட விளக்க கூட்டம்</u>

பழநி, : பழநி அருகே பாலசமுத்திரத்தில் விவசாயிகளுக்கு வேளாண்துறை சார்பில் நீர்வள, நிலவள மே ம்பாட்டுத் திட்ட விளக்கக் கூட்டம் மற்றும் வேளாண் மை தொழில்நுட்ப ஆலோசனை கூட்டம், தகவல் மைய துவக்க விழா நடத்தப்பட்டது. பழநி வட்டார வே ளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி தலைமை வகி த்து சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் வேளாண் பொறியியல் துறை, கால் நடை துறை, வேளாண் வணிகத்துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் சார்பில் அலுவலர்கள் இத்திட்டத்தின் கீழ் துறை வா ரியாக செயல்படுத்த உள்ள திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர். இதில் வேளாண் கருத்து

காட்சிகளும், செயல் விளக்கங்களும் செய்து காண்பிக்கப்பட்டன. கூட்ட த்தில் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**ராமேஸ்வரம் மவுசு குறையாத மல்லிகை பதியன்**

கடல் சார்ந்த தங்கச்சிமடம் பகுதியில் மீன்பிடி தொழில் பிரதானமாக இருந்தாலும், இங்கு வளர்க்கப்படும் மல்லிகை பதியன்களுக்கு தமிழகம் முழுவதும் நல்ல வரவேற்பு உண்டு. இங்குள்ள மல்லிகை பதியன்களில் பூக்கும் மல்லிகைப் பூக்களுக்கு இந்தியா மட்டுமல்லாமல் வெளிநாடு களிலும் தனி மவுசு உண்டு. மதுரை, திண்டுக்கல், கோவை, கொடைக் கானல் போன்ற பகுதியில் உள்ள விசாயிகள் இங்கிருந்து அதிகளவில் மல்லிகை பதியன்களை வாங்கிச் செல்கின்றனர். தங்கச்சிமடம் ஊராட்சி பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அன்னை தெரசாள் நகர், தென்குடா, மாந்தோப்பு பகுதி மக்கள் தேவைக்காக புதிய கிணறு மற்றும் மேல்நிலைத் நீர்த்தேக்க தொட்டி, வடக்கு தெரு, மெய்யம் புளி, கழுகுப்புளி பகுதியில் புதிய தார்ச்சாலை, மெயின்ரோட்டில் உயர் கோபுர சோலார் விளக்குகள் மற் றும் ஊராட்சி சேவை மைய கட்டிடம் உட்பட நடப்பு ஆண்டில் ரூ.75 லட்சம் செலவில் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டுள்ளன.தங்கச்சிமடம் ஊராட்சி தலைவர் ஞானசீலன்: தங்கச்சிமடம் ராட்சியில் உள்ள 5 வார்டுகளில் 125 தெருக்கள் உள்ளன. இதில் 85 தெருக்களுக்கு இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன. எஞ்சிய பகுதிகளிலும் விரைவில் இணைப்புச் சாலைகள் போட நடவடிக்கை எடுத்து வருகிறோம். 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. டிராக்டர் ஒன்று மட்டும் உள்ளதால் சுகாதாரப்பணிகளை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை. இதனால், தனியார் பங்களிப்புடன் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மக்களின் தேவைக்கேற்ப புதிதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வும் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றார்.கடல் சார்ந்த ராமேஸ்வரம்

பாம்பன், தங்கச்சிமடம் பகுதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களும், ஆன்மிக தலங்களும் இருந்த போதும் சுற்றுலா சார்ந்த திட்டங்கள் எதுவும் இன்று வரை செயல்படுத்தப்படவில்லை. மன்னார் வளைகுடா தீவுகளை பார்க்கும் வகையில் படகு போக்குவரத்து திட்டம், கடற்கரையோர பூங்கா போன்ற திட்டங்களை செயல்படுத்தியும், வில்லூண்டி தீர்த்தம், சந்தியாகப்பர் ஆலயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து சுற்றுலா சார்ந்த திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும், இப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## <u>கல்லலில் மக்காச்சோளம் பயிரிடலாம் வேளாண்மை அதிகாரி ஆலோசனை</u>

காரைக்குடி, : கல்லல் பகுதியில் நெல்லுக்கு பதிலாக மக்காச்சோளம் பயிரிடுவது குறித்து வேளாண் மை உதவி இயக்குநர் கணேசன் ஆலோசனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், காரைக்குடி அருகே கல்லல் பகுதிகளில் இந்தாண்டு பருவமழை தாமதமாக தொடங்கியது. இதனால் இங்கு நெல் சாகுபடி நடக்கவில்லை. சாகுபடி பரப்பு குறைந்து உணவு உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. எனவே உணவு உற்பத்தியினை சமன்படுத்திட நெல் சாகுபடி பரப்பிற்கு ஈடாக தண்ணீர் ஆதாரம் உள்ள நிலங்களில் மக்காச்சோளம் சாகுபடி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மக்காசோளம் சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு விதை முதல் அனைத்து தொழில்நுட்பங்கள் மற்றும் அறுவடைக்கு பின் நல்ல விலைக்கு விற்பனை செய்ய தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. சாகுபடி செய்யும் முறை. 12.5 மெட்ரிக் டன் மக்கிய குப்பையை ராக பரப்பி அதனுடன் 2 கி அசோபைரில்லம் இட்டு உழவு பணி மேற்கொள்ள வேண்டும். சட்டி கலப்பை கொண்டு உழவு செய்த பின்னர் கொக்கி கலப்பை கொண்டு இரண்டு முறை உழவு செய்திட வேண்டும். மண்வளம் நீர் ஆதாரத்தை பொறுத்து பார் கலப்பையினைக் கொண்டு பார் அமைக்கலாம். வீரிய ஒட்டு ரகங்கள் என்றால் ஒரு ஏக்கருக்கு 7 கிலோ மட்டும் பயன்படுத்த வேண்டும். பயிர் இடைவெளி வரிசைக்கு வரிசை 60 செமீ மற்றும்

செடிக்கு செடி 25 செமீ இடைவெளியில் பராமரிக்க வேண்டும். விதை யினை 4 செமீ ஆழத்தில் வரிசையில் விதைக்கவும். நல்ல முளைப்புத் திறன் உள்ள விதைகளைப் பயன்படுத்தும் பொழுது குழிக்கு ஒரு விதை விதைத்தால் போதும். இடைவெளியில் களையினைக் கட்டுப்படுத்திட உளுந்து விதைப்பு செய்து கூடுதல் வருமானம் பெறலாம். இரண்டு விதை விதைக்கும் போது 15 நாட்கள் கழித்து நல்ல செடியை விட்டு மற்றொரு செடியினை அகற்ற வேண்டும். மாதம் ஒருமுறை களைஎடுத்து செடியின் தூரில் நன்கு மண் அ ணக்க வேண்டும். விதைத்த 25ம் நாள் பாதியளவு தழைச்சத்தும் 45ம் நாள் மீதமுள்ள தழைச்சத்தையும் இட வேண்டும். தேவையான நேரத்தில் நீர் பாய்ச்ச வேண் டும். 15 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் மேற்கொள்ளலாம். மக்காசோளம் நன்கு முற்றிய பின்பு அறுவடை பணி மேற்கொள்ளலாம். மக்காச்சோளம் சாகுபடி செய்யவுள்ள விவசாயிகளுக்கு வீரிய ஒட்டு ரக விதை முழு மானியத்தில் விநியோகம் செய்யப்பட உள்ளது என்றார்.

## <u>சேரன்மகாதேவியில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

வீரவநல்லூர், : சேரன்மகாதேவி சப் கலெக்டர் அலுவலகத்தில் நாளை வட்டார அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடக்கிறது. சேரன்மகாதேவி கோட்டத்தில் உள்ள ராதாபுரம், நாங்குநேரி, அம்பை வட்டங் களை சேர்ந்த விவசாயிகளுக்கு கோட்டஅளவிலான விவசாயி கள் குறை தீர்க்கும் கூட்டம் நாளை (12ம் தேதி) காலை 10.30 மணி அளவில் சேரன்மகாதேவி சப்-கலெக் டர் அலுவலகத்தில் நடக்கிறது. இதில் அனைத்து துறை அரசு அலுவலர்களும் பங்கேற்கின்றனர். ராதாபுரம், நாங்குநேரி, அம்பை வட்டங் களை சேர்ந்த விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று பயனடையலாம் என்று சேரன்மகாதேவி சப்-கலெக்டர் விஷ்ணு தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காதலர் தினத்தை முன்னிட்ட கொய்மலர் விலை அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி**



காதலர் தினத்தை முன்னிட்டு கொய் மலர்களுக்கு நல்லவிலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.
காதலர்தினம்
நீலகிரி மாவட்டத்தின் முக்கிய விவசாய மாக இருந்த தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் மாற்றுப்பயிராக கொய்மலர் சாகுபடி அறிமுகப் படுத்தப்பட்டது. இதற் காக தோட்டக்கலைத்துறை மூலம் பயிற்சி மற்றும் வங்கி கடன் ஆகியவை வழங்கப்பட்டன. தற்போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் கொய்மலர் சாகுபடியில் ஈடு பட்டு வருகின்றனர். இந்த நிலையில் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் 14-ந் தேதி காதலர் தினம் கொண்டாடப் பட்டு வருகிறது. இந்த கொண்டாட்டத்திற்காக கொய்மலர்கள் அதிகளவில் விற்பனையாகிறது. இதன் காரணமாக இந்தியா மட்டுமின்றி வெளி நாடுகளிலும் கொய் மலர்களுக்கு தற்போது கிராக்கி அதிகம் இருந்து வருகிறது.
கொய்மலர்களுக்குவிலைஅதிகரிப்பு
நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கொய்மலர்களுக்கு நல்ல விலை கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரி வித்து உள்ளனர். இது குறித்து குன்னூர் கரடி பள்ளத்தை சேர்ந்த கொய்மலர் விவசாயி சிவக்குமார் என்பவர் கூறியதாவது:- காதலர் தினத்தை முன்னிட்டு ஓசூரில் இருந்து அதிகளவு கொய்மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால் ஒரு சில கார ணங்களால் ஓசூரில் கொய்மலர் சாகு படியில் சரிவு ஏற்பட்டது. இதனை தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில்

உள்ள கொய்மலர்களுக்கு கிராக்கி ஏற்பட்டது. தற்போது நீலகிரி மாவட் டத்தில் உற்பத்தி செய்யப்படும் கொய்மலர்கள் தமிழ்நாடு, பெங்களூரு, ஐதராபாத், மும்பை, டெல்லி, கொல்கத்தா போன்ற நகரங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.இதனால் மலர்களுக்கு கூடுதலாகவிலைகிடைத்துவருகிறது.

விவசாயிகள்மகிழ்ச்சி

லில்லியம் மலர்களில் ஒரு வகையான ஒரி யண்டல் மலர்களுக்கு தற்போது அதிக கிராக்கி உள்ளது. மொத்தம் 10 மலர் மொட்டுகள் கொண்ட ஒரு பண்டல் ரூ.250-க்கு செல் கிறது. முன்பு ஒரு மலர் ரூ.5-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு மலர் ரூ.25-க்கு விற்பணையாகிறது.காதலர் தினத்தை முன் னிட்டு ஏற்றுமதி மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகள் கட்சி நிர்வாகிகள் கூட்டம்



பெரம்பலூரில் தமிழக விவசாயிகள் கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மாநிலத்தலைவர் இரூர் ராமராஜன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இந்தியாவில் மேற்கு நோக்கிபாயும்ஆறுகளை கிழக்கு நோக்கி திருப்பிட மத்தியஅரசை வலியுறுத்தி உள்ள தமிழக அரசின் செயலை பாராட்டுதல், தமிழகத்தில் நதிகள் இணைப்பு திட்டத்தினை அறிவித்து காவிரி ஆற்றின் குறுக்கே ரூ.180 கோடி மதிப்பில் தடுப்பணை கட்டி, கால்வாய் மூலம் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கூடுதல் பாசன வசதி பெறச்செய்த ஜெயலலிதாவிற்கு நன்றி தெரிவித்தல். தமிழக விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு வேளாண் விளை பொருட் களுக்கு விவசாயி களுக்கு கட்டுபடியாகிற வகையில் மத்திய அரசு விலை நிர்ணயம் செய்திட வலியுறுத்தியும், முந்தைய ஆட்சிகாலங்களில் வழங்கியது போல உரமானியத்தை மத்திய அரசு வழங்கிடவேண்டும்

என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாநில செயலாளர் சேலம் குருமூர்த்தி, திருச்சி துரைராஜ், கடலூர் நாராயணசாமி, புதுக்கோட்டை ஞான மூர்த்தி, தஞ்சை நடராஜன், பெரம்பலூர் ராமசாமி உள்பட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.